தினமணி

**தனியார் பால் விலை லிட்டருக்கு ரூ.2 உயர்வு**

First Published : 29 May 2010 04:50:14 AM IST



சென்னை, மே 28: தனியார் நிறுவனங்களின் பால் விலை லிட்டருக்கு ரூ.2 உயர்ந்துள்ளது.

200 மி.லி தயிர் பாக்கெட்டும் ரூ.1 அதிகரித்து ரூ.8-க்கு விற்பனை செய்யப்படுகிறது. இந்த விலை உயர்வு கடந்த சில நாள்களுக்கு முன்பு அமலுக்கு வந்துள்ளதாகத் தெரிகிறது.

பால் கொள்முதல் விலை உயர்வின் காரணமாக தனியார் நிறுவனங்களின் பால் விலை உயர்ந்துள்ளதாக டீலர்கள் தெரிவிக்கின்றனர். இந்த அறிவிப்பு சுற்றறிக்கை மூலம் அந்தந்தப் பகுதி கடைகளுக்கும், விற்பனையாளர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியார் நிறுவனத்தின் பால் அரை லிட்டருக்கு ரூ.1 அதிகரித்துள்ளது.

பால் பாக்கெட்டுகள் மூன்று வகையாகப் பிரித்து விற்கப்படுகின்றன. அதன்படி 250 மி.லி. பால் ரூ.6, அரை லிட்டர் பால் ரூ.12 (பச்சை நிற பாக்கெட்), ரூ.14 (நீல நிற பாக்கெட்), ரூ.16 (ஆரஞ்சு நிற பாக்கெட்) எனப் பிரித்து விற்பனை செய்யப்பட்டது.

÷200 மி.லி. தயிர் பாக்கெட் ரூ.7-க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது.

இதில் ரூ.14 மற்றும் ரூ.16-க்கு விற்கப்பட்ட பாக்கெட்டுகளின் விலை உயர்ந்துள்ளது.

கடைக்காரர்களின் கமிஷன்: கடைக்காரர்களுக்கு வழங்கப்படும் கமிஷன் பல ஆண்டுகளாக உயர்த்தப்படாமல் இருக்கிறது என விற்பனையாளர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து அம்பத்தூர் சோழம்பேடு பகுதியைச் சேர்ந்த மளிகைக் கடை வியாபாரி முருகன் கூறியதாவது:

÷தனியார் பால் அரை லிட்டர் ரூ.5-க்கு விற்பனை செய்தபோது எங்களுக்கு ஒரு லிட்டருக்கு 25 பைசா கமிஷன் தரப்பட்டது. இன்று அரை லிட்டர் பாலின் விலை ரூ.12, ரூ.15, ரூ.17 உயர்த்தப்பட்டபோதும் எங்களுக்கு லிட்டருக்கு 25 பைசா மட்டுமே கமிஷன் வழங்கப்படுகிறது.

பால் விலையை உயர்த்திக் கொண்டே போனாலும் எங்களுக்கான கமிஷன் உயரவே இல்லை.

மேலும் எங்களிடம் பால் பாக்கெட்டுகளை பெற்றுச் செல்லும் வாடிக்கையாளர்கள், பாலை கொண்டு செல்வதற்காக ஒரு பாலிதீன் பையையும் கூடவே கேட்டு வாங்கிக் செல்கின்றனர். ஒரு பையின் விலை 25 பைசா என்றார் அவர்.

மேலும் பால் பாக்கெட்டுகளை காலையில் டீலரிடம் இருந்து பெறும்போதே, அதில் ஏதாவது சேதம் உள்ளதா என்று பார்க்க வேண்டும். காலையில் அவசரத்தில் பால் பாக்கெட்டின் சேதம் குறித்து ஆராய்ந்து கொண்டிருக்க முடியாது. இதனால் கடைக்காரர்களுக்குத்தான் நஷ்டம் ஏற்படுகிறது என விற்பனையாளர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

**வயல் கண்காணிப்பாளர் பணிக்கான நியமன ஆணை வழங்கல்**

First Published : 28 May 2010 12:45:39 PM IST

காரியாபட்டி, மே 27: விருதுநகர் மாவட்டம், கோவிலாங்குளம் வேளாண் மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் வயல் கண்காணிப்பாளர் பணிக்கான நியமன ஆணை வழங்கும் விழா திட்ட ஒருங்கிணைப்பாளர் முரளி கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்றது. பேராசிரியர்கள் விவேகானந்தன், ராஜாராம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பட்டயப் படிப்பு நிறுவன முதல்வர் செல்லையா வரவேற்றார்.

கோவை இ.ஐ.டி. பாரி மற்றும் தரணி சர்க்கரை ஆலை நிறுவனங்களில் பணிக்கான நியமன ஆணையை கோவை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலை இயக்குநர் ராதாகிருஷ்ணன் மாணவ, மாணவிகளுக்கு வழங்கினார்.

பேராசிரியர் பாலகிருஷ்ணன் ஏற்பாடு செய்தார். உதவி பேராசிரியை மாரீஸ்வரி நன்றி கூறினார்.

**வேளாண் காப்பீட்டுத் திட்டம்: வங்கி அதிகாரிகளுக்குப் பயிற்சி**

First Published : 28 May 2010 12:15:48 PM IST

மதுரை, மே 27: தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம தொடர்பாக கூட்டுறவு வங்கி அதிகாரிகள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கி அதிகாரிகள் உள்ளிட்டோருக்கான பயிற்சி முகாமை மாவட்ட ஆட்சியர் சி.காமராஜ் வியாழக்கிழமை தொடங்கி வைத்தார்.

மதுரை மாவட்ட மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டரங்கில் நடைபெற்ற இந்த முகாமை தொடங்கி வைத்து அவர் பேசியது:

பொதுவாக வெள்ளம், வறட்சி, புயல், பூச்சி, நோய்த் தாக்குதல் போன்ற இயற்கைச் சீற்றங்களால் பயிர்கள் பாதிக்கப்படுகின்றன. இதனால் விவசாயிகளின் கடின உழைப்பு,விளைச்சல் பயனற்றுப்

போகாமல் இருப்பதற்கு தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் உறுதுணையாக இருக்கிறது. இத்திட்டம், நடைமுறையில் இருப்பதால் அதிக விலையுள்ள இடுபொருள்களை உபயோகித்து நவீன விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

2008-09-ம் ஆண்டில் தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தில் மதுரை மாவட்டத்தில் ரூ.95,05,933 என்ற அளவில் காப்பீட்டு தொகை வழங்கப்பட்டுள்ளன. மதுரை கிழக்கு, செல்லம்பட்டி, கள்ளிக்குடி, டி.கல்லுப்பட்டி வட்டாரங்களைச் சேர்ந்த 3565 விவசாயிகள் இந்தத் திட்டத்தின் கீழ் காப்பீட்டு தொகை பெற்றுள்ளனர். மேலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு உள்ளது.

நாட்டில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழக அரசு விவசாயிகளின் நலன் கருதி, அவர்கள் செலுத்த வேண்டிய காப்பீட்டுத் தொகையில் 50% மானியமாக வழங்குகிறது.

கடந்த ஆண்டுகளில் வரையில் வட்ட அளவில் மற்றும் வட்டார அளவில் பயிர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டால் மட்டுமே விவசாயிகள் நிவராணத் தொகை பெற வேண்டிய நிலை இருந்தது. ஆனால் தற்போது பிர்கா அளவில் பயிர் பாதிப்பு ஏற்பட்டாலும் எளிதில் காப்பீட்டுத் தொகை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

எனவே நில உரிமையாளர்கள் மட்டுமல்லாது, குத்தகைதாரர்களும் இத்திட்டத்தில் பயனடையலாம். ஒரு ஏக்கர் சம்பா நெற்பயிருக்கு காப்பீட்டுப் பிரிமியத் தொகை ரூ.206. இதில் அரசு 50% மானியம் வழங்கும். மீதம் ரூ.103 மட்டுமே விவசாயிகள் செலுத்த வேண்டும்.

இந்த காப்பீட்டுத் தொகையை பயிர்க்கடன் பெறும் அனைத்து விவசாயிகளிடமும் கண்டிப்பாக கூட்டுறவு மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் பிடித்தம் செய்ய வேண்டும் என ஆட்சியர் தெரிவித்தார்.

இதில் அனைத்து கூட்டுறவு வங்கி அதிகாரிகள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**கோவில்பட்டியில் வயல் விழா**

First Published : 28 May 2010 10:33:51 AM IST

கோவில்பட்டி, மே 27: கோவில்பட்டி யில் பருத்தியில் நுனியைக் கிள்ளுதல் குறித்த வயல் விழா நடைபெற்றது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் நீர்வள, நிலவளத் திட்டம் சார்பில் கோவில்பட்டி வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் கலிங்கலாறு துணை வடிநிலப் பகுதியைச் சேர்ந்த கோமதிமுத்துபுரத்தில் நடைபெற்ற இவ் விழாவிற்கு ஆராய்ச்சி நிலைய இணைப் பேராசிரியர் மு. ராஜேஸ்வரி தலைமை வகித்தார்.

வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் உதவிப் பேராசிரியர்கள் ரா. கமல்குமார், சுப்புலட்சுமி ஆகியோர், பருத்தியில் நுனியைக் கிள்ளுதலின் முக்கியத்துவம், பூ உதிர்தலைத் தடுத்தல், உற்பத்தியை அதிகரிக்க கடைப்பிடிக்க வேண்டிய தொழில்நுட்பங்கள் குறித்து பேசினர்.

முன்னதாக, நீர்வள, நிலவளத் திட்டத்தின் பொறுப்பு விஞ்ஞானி சுப்புலட்சுமி வரவேற்றார். ஆராய்ச்சி உதவியாளர் செல்வகுமார் நன்றி கூறினார்.

**அரவக்குறிச்சியில் இன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

First Published : 28 May 2010 11:01:10 AM IST

கரூர், மே 27: கரூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் அரவக்குறிச்சியில் வெள்ளிக்கிழமை (மே 28) நடைபெறுகிறது.

கரூர், குளித்தலை பகுதிகளில் மட்டுமே நடத்தப்பட்டு வந்த இந்தக் கூட்டங்களை மாவட்டத்தின் மற்ற பகுதிகளிலும் நடத்த வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதையடுத்து மே மாதத்திற்கான மாவட்ட விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் முதல் முறையாக அரவக்குறிச்சி வட்டாட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு ஆட்சியர் (பொ) சி. முனிரத்தினம் தலைமை வகிக்கிறார். கரூர் மாவட்ட விவசாயிகள் அனைவரும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்க வேண்டும் என ஆட்சியர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும், குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் பெறப்பட்ட மனுக்கள் மட்டுமே விவாதத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தினமலர்

**ஏற்காட்டில் ரூ.11 கோடியில் தாவரவியல் பூங்கா வேளாண் அமைச்சர் தகவல்**

சேலம்: ""ஏற்காட்டை அழகுபடுத்தும் வகையில், 11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தாவிரவியல் பூங்கா அமைக்கும் பணி விரைவில் துவங்கும்,'' என, தமிழக வேளாண் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் தெரிவித்தார். ஏற்காட்டில் 35வது கோடைவிழா மற்றும் மலர்கண்காட்சியை துவக்கி வைத்த தமிழக வேளாண் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம், 33.21 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கிப் பேசியதாவது: தமிழகத்தில்

எட்டாயிரம் அடி உயரத்தில் ஊட்டி, கொடைக்கானல் போன்ற சுற்றுலா தலங்கள் உள்ளன. அங்குள்ள சீதோஷ்ண நிலை எப்போதும் ஒரே மாதிரியாக இருக்காது. அவ்வப்போது மாறுபடும். ஆனால் ஏற்காட்டில் எப்போதும் ஒரே மாதியான சீதோஷ்ண நிலை தான் இருக்கும். அதனாலேயே கர்நாடகா, ஆந்திரா மற்றும் வெளிமாவட்ட சுற்றுலா பயணிகள் அதிகமாக இங்கு வருகின்றனர். வசதி படைத்தவர்கள் மட்டுமின்றி ஏழை, எளிய மக்களும் வந்து செல்லும் வகையில் ஏற்காடு அமைந்துள்ளது.

மற்ற கோடை வாசஸ்தலங்களில் உள்ளது போல், ஏற்காட்டில் தாவரவியல் பூங்கா அமைக்க 11 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. 40 ஏக்கர் பரப்பளவில் ஏரி அருகே தாவரவியல் பூங்கா அமைக்கப்படுகிறது. இதற்கான பணிகள் விரைவில் துவங்கும். ஏற்காட்டில் காஃபி, சிறு தானியங்கள், பழ வகைகள் உற்பத்தி அதிகம். அதன் மூலம் வணிகத்தை பெருக்க முடியும். தமிழக அரசுக்கும் கணிசமான தொகை வருவாயாக கிடைக்கும். ஏற்காட்டை சுற்றியுள்ள கிராமங்களுக்கு சாலைவசதி, மின்வசதி, பள்ளி வசதி ஆகியவை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.இவ் வாறு அவர் பேசினார். மத்திய சுகாதாரத்துறை இணை அமைச்சர் காந்திசெல்வன் பேசியதாவது:

சேலம் மாவட்டம் ஏற்காட்டில் கோடை விழா கொண்டாடப்படுவதுபோல், நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் வல்வில் ஓரி விழா கொண்டாடப்படுகிறது. அதை சுற்றுலா தலமாக மாற்றுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. படகு இல்லம், வீயூ பாயிண்ட் போன்றவை அமைக்கப்பட்டுள்ளது. 11 கோடி ரூபாயில் கொல்லிமலை செல்ல மாற்று வழிப்பாதை அமைக்கப்படுகிறது. சேலம் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை 140 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டு வருகிறது. முதல்வர் தேதி கொடுத்தவுடன் திறப்பு விழா நடைபெறும். மற்ற மாநிலங்களை விட தமிழகத்தில் அனைத்து மருத்துவ வசதிகளும் உள்ளன. மக்களுக்கான திட்டங்களை நிறைவேற்றுவதில் தமிழக அரசு முன்னோடியாக விளங்குகிறது. இவ்வாறு அவர் கூறினார். வணிக வரித்துறை அமைச்சர் உபயதுல்லா, மாவட்ட கலெக்டர் சந்திரகுமார், தோட்டக்கலைத்துறை இயக்குனர் சந்திரமோகன், ஆதிசங்கர் எம்.பி., மேயர் ரேகா பிரியதர்ஷினி, திட்ட அலுவலர் வரதராஜன், மாநகராட்சி கமிஷனர் பழனிசாமி, எம்.எல்.ஏ.,க்கள் தமிழ்செல்வன், சின்னதுரை, எஸ்.வி.சேகர் டி.ஆர்.ஓ., கலையரசி மற்றும் அதிகாரிகள் பலர் பங்கேற்றனர்.

**தூர்வாரும் பணிகளை ஆய்வு செய்ய கண்காணிப்புக்குழு விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் வலிய**

தஞ்சாவூர்: "காவிரி டெல்டா மாவட்டங்களில் நடக்கும் தூர்வாரும் பணிகளை ஆய்வு செய்ய கண்காணிப்புக்குழு அமைக்க வேண்டும்' என தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் நேற்று நடந்தது. கூட்டத்துக்கு கலெக்டர் சண்முகம் தலைமை வகித்து பேசியதாவது: நடப்பாண்டில் முன்பட்ட குறுவை சாகுபடி இதுவரை மூன்றாயிரத்து 800 ஹெக்டேரில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தாண்டு 34 ஆயிரம் ஹெக்டேரில் குறுவை சாகுபடி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இதில், 25 ஆயிரம் ஹெக்டேர் செம்மை நெல் சாகுபடி முறையில் நடவு மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மை விரிவாக்க மையம் மூலமாக இதுவரை ஆடுதுறை 43 ரக நெல் 232 மெட்டரிக் டன்னும், ஆடுதுறை 36 ரகம் 58 மெட்டரிக் டன்னும், ஆடுதுறை 45 ரகம் 10 மெட்ரிக் டன் என மொத்தம் 3010 மெட்ரிக் டன் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 104 மெட்ரிக் டன் இருப்பு உள்ளது. கூடுதலாக குறுவை விதை தேவை ஏற்பட்டால், அதனை வழங்க கோடை பருவத்தில் 70 மெட்டரிக் டன் விதைகள் கொள்முதல் செய்யப்பட்டு சுத்திகரிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விவசாயிகள் ஐ.சி.டி.பி., திட்டத்தின் கீழ் கிலோவுக்கு ரூபாய் ஐந்து மானிய விலையில் நெல் விதைகதள பெற்று கொள்ளலாம். இப்பருவத்தில் நீரை சிக்கனமாக பயன்படுத்திட செம்மை நெல் சாகுபாடியை விவசாயிகள் மேற்கொள்ளலாம். கூட்டுறவு மற்றும் தனியார் உரக்கடைகளில் 8558 மெட்டரிக் டன் யூரியாவும், 1785 மெட்ரிக் டன் டி.ஏ.பி.,யும், 2893 மெட்ரிக் டன் பொட்டாஷ், 1526 மெட்ரிக் டன் காம்ளக்ஸ் உரமும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

காவிரி விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் சுவாமிமலை விமலநாதன்: இந்தாண்டு வழக்கத்தை விட அதிகளவில் மழை பெய்யும் வாய்ப்பிருப்பதாக வானிலை ஆராய்ச்சியினர் கருத்து தெரிவிப்பதால், மேட்டூர் அணையை எப்பொழுதும் போல் ஜூன் 12ல் திறக்க வேண்டும். கோடை நெல் அறுவடை துவங்கியுள்ள நிலையில் நெல் கொள்முதல் லையங்கள் தேவையான இடங்களில் திறக்க வேண்டும். கரும்பு விவசாயிகள் சங்க செயலாளர் கோவிந்தராஜ்: குறுவை பருவத்துக்கு தேவையான விதை நெல் ஆடுதுறை 36 ரக நெல் அனைத்து வேளாண் விரிவாக்க மையங்களில் போதிய அளவு இருப்பு இல்லை. அதனால் தனியார் கடைகளில் அதிக விலைக்கு வாங்க வேண்டிய நிலை உள்ளது.

அண்ணா சர்க்கரை ஆலை வரும் அரவை பருவத்துக்கு கரும்பு வெட்டி அனுப்பும் விவசாயிகளுக்கு வாகன வாடகையை ஆலையை ஏற்றுக் கொண்டது போல், வெட்டு கூலியையும் ஆலை நிர்வாகமே ஏற்று கொள்ள வேண்டும். தமிழ்நாடு விவசாயிகள் சங்க செயலாளர் சாமி நடராஜன்: தஞ்சை மாவட்டத்தில் நடந்து வரும் தூர்வாரும் பணிகள் திட்ட மதிப்பீட்டின கீழ் நடக்கிறதா என்பதை ஆய்வு செய்ய கண்காணிப்பு குழு அமைக்க வேண்டும்.

பம்புசெட்டுக்கு மின் இணைப்புக்கோரி சுய முதலீட்டு திட்டத்தில் ரூபாய் 25 ஆயிரம், ரூபாய் 50 ஆயிரம் பணம் கட்டியுள்ள விவசாயிகளுக்கு உடன் மின் இணைப்பு வழங்க வேண்டும். இவ்வாறு விவசாய சங்கங்களை சேர்ந்தவர்கள் பேசினர்.

**இயற்கை அழிந்தாலும் பசுமை அழியாது நபார்டு வங்கி உதவி பொது மேலாளர்**

முதுகுளத்தூர்: ""இந்தியாவில் வளங் கள் அழிந்தாலும், பசுமை புரட்சிகள் அழியாத நிலையில் விவசாயமும் பாதிக்கப்படாது," என, நபார்டு வங்கி உதவி திட்ட பொது மேலாளர் கண்ணபிரான் பேசினார். முதுகுளத்தூர் அருகே முத்துவிஜயபுரத்தில் முன்னோடி பயிர்கள் உற்பத்தி திறன் மேம் பாட்டு திட்டம் துவக்க விழாவில அவர் பேசியதாவது:

தமிழ்நாட்டில் ஆறு முன்னோடி பயிர்கள் உற்பத்தி திறன் மேம்பாட்டு குழுக்களில், ராமநாதபுரம் மாவட்டத் தில் முத்துவிஜயபுரத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பருவ மழை , விவசாய நிலத்திற் கும் ஏற்றார்போல் விவசாயிகள் விவசாயம் செய்து லாபம் பெற முயலவேண்டும். இயற்கை வளங்கள் அழிந்தாலும், விவசாயம் அழியாமல் பாதுகாக்கவே இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட் டுள்ளது , என்றார்.

இணை மேலாளர் நித்தியானந்தன் தலைமை வகித்தார். ராமநாதபுரம் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் சடகோபால் முன்னிலை வகித்தார். திட்ட ஆலோசகர் சோலையப்பன், தேசிய உணவு பாதுகாப்பு இயக்குனர் பாஸ்கர், ஸ்கெச் டிரஸ்ட் செயலாளர் காந்திராஜ், திட்ட செயலாக்க ஒருங்கிணைப்பாளர் நமச்சிவாயம் கலந்து கொண்டனர்

**மானிய விலை விதைகள்**

தேனி: மாவட்டத்தில் உள்ள விரிவாக்க மையங்களிலும் மானிய விலையில் விதைகள் விற்பனைக்கு வைக் கப்பட்டுள்ளன. முதல் போக சாகுபடிக்கு தேவையான ஐ.ஆர்., 50, நெல் ஏ.டி.டி., 36, 2ம் போகத்திற்கு தேவையான ஏ.டி.டி., 39, கோ- 43, ஏ.டி.டி., 45, மற்றும் கம்பு (ஐ.சி.எம்.பி., 221), துவரை, உளுந்து, பாசிப்பயறு, கே.எம்., 2, கோ-6, கோ- 7, தட்டப்பயறு, பருத்தி, எஸ்.வி.பி.ஆர்., 2, எம்.சி.யு., 12, சுப்ரியா, நிலக்கடலை விதைகள் விற்பனைக்கு வைக்கப் பட்டுள்ளன. பயறு வகை விதைகளுக்கு கிலோவிற்கு 20 ரூபாய் மானியம், நிலக்கடலை விதைக்கு 12 ரூபாய் மானியம், நெல் விதைக்கு 5 ரூபாய் மானியம், பருத்தி விதைக்கு 25 சதவீத மானியத்திலும் விரிவாக்க மையங்களில் வழங்கப்படுகின்றன.

**கொத்தமல்லி கிலோ ரூ. 120**

பழநி:பழநி உழவர்சந்தையில் ஒரு கிலோ கொத்தமல்லி ரூ. 120க்கு விற்றது. சுற்றுவட்டார பகுதியில் மழையில்லாததால் விளைச்சல் இல்லை. கடந்த சில நாட்களாக வரத்தும் குறைவாக இருந்தது. கடந்த வாரம் கிலோ ரூ. 90க்கு விற்ற கொத்தமல்லி நேற்று ரூ.120க்கு விற்றது. பிற காய்கறிகளின் விலைவிபரம் (ரூ. ஒரு கிலோவிற்குரியது): கத்தரி-6, தக்காளி-30, வெண்டை-10, புடலை-16, பீன்ஸ்-14, சுரை-5, பூசணி-14, அவரை-14, முள்ளங்கி-12, மிளகாய்-30, பெல்லாரி-10, வெங்காயம்-12, பீட்ரூட்-14, மாங்காய்-10, புதினா-50, சேணை-32, இஞ்சி-70, உருளை-13, சேணை-14.

**பூ விலை சரிவு**

திண்டுக்கல்: திண்டுக்கல் மாவட்டத் தில் போதிய மழை இல்லாததால், அனைத்து வகை பூக்களின் வரத்தும் வெகுவாக குறைந்துள்ளது. முகூர்த்தம், பண்டிகை இல்லாததால், பல வாரங் களாக பூக்களின் விலை குறைவாக இருந்தது. முகூர்த்தத்தை முன் னிட்டு திண்டுக்கல்லில் பூக்களின் விலை, இரண்டு நாட்களுக்கு முன் கணிசமான அளவில் அதிகரித்தது.

ஒரு கிலோ மல்லி கை 200 ரூபாய்க்கும், கனகாம்பரம் 300க்கும், சம் மங்கி 250க்கும் விற்பனையானது.நேற்று இவற்றின் விலை வெகுவாக குறைந்து, சம்மங்கி 100, கனகாம்பரம் 120, மல்லிகை 60, அரளி 40, செண்டுமல்லி 30, ரோஜா 60, முல்லை 70, சேவற் கொண்டை 40 ஆகிய விலைகளில் விற்கப்பட்டது.

**கண்மாய்களில் சீமைக்கருவேல மரங்களை அகற்ற நடவடிக்கை விவசாயிகள் கூட்டத்தில் தகவல்**

மதுரை:நிலத்தடி நீர்மட்டம் குறைய காரணமான சீமைக்கருவேல மரங்களை கண்மாய்களில் இருந்து அகற்ற உள்ளதாக கலெக்டர் காமராஜ் கூறினார்.மதுரை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் நேற்று அவரது தலைமையில் நடந்தது. டி.ஆர்.ஓ., தினேஷ்பொன்ராஜ் ஆலிவர், கூட்டுறவு இணைப்பதிவாளர் குமார், விவசாய இணை இயக்குனர் சங்கரலிங்கம் கலந்து கொண்டனர்.

கலெக்டர் பேசியதாவது:கடந்த மாதம் வீசிய காற்று, மழையால் வாழை மரங்கள் பாதிக்கப்பட்டன. அவற்றை வருவாய்த்துறை, தோட்டக்கலை துறையினர் ஆய்வு செய்து, வாழை, முருங்கை மரங்கள் பாதிப்பு ஏற்பட்ட மதுரை கிழக்கு, மேற்கு, உசிலம்பட்டி, திருமங்கலம், கொட்டம்பட்டி யூனியன்களில் 103 விவசாயிகளுக்கு நிவாரணம் பெற சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

---

குப்பம்மாள் சமுத்திரம் கண்மாயை ஆய்வு செய்ததில், கரை உயர்த்தப்பட்டுள்ளது ஆய்வில் தெரிகிறது. இங்கு திருகுமடை அமைத்து தரும்படி கூறினர். இதுதொடர்பாக பொதுப்பணித் துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். மதுரை மாவட்ட கண்மாய்களில் சீமைக்கருவேல மரங்கள் நிறைந்துள்ளதால் நிலத்தடி நீர்மட்டம் குறைகிறது. அவற்றை அகற்றும்படி மனு தந்தனர். இதற்கு பொதுப்பணித்துறை, வருவாய், வனத்துறையினரின் கூட்டம் நடத்தி அரசுக்கு பரிந்துரை செய்யப்படும்.

விதை இருப்பு: தென்மேற்கு பருவமழை விரைவில் துவங்கி விவசாயப் பணி துவங்க உள்ளதால் விதை, உரம், இடுபொருட்கள் தேவையான அளவிற்கு இருப்பு வைக்கப் பட்டுள்ளது. விரிவாக்க மையங்களில் 545 மெ.டன் நெல் விதை உள்ளது. பயறு வகை விதை 7.63 மெ.டன், பருத்தி 3.3 மெ.டன், எண்ணெய் வித்துக்கள் 11.5 மெ.டன் அளவு உள்ளது. நெல் விதை கிலோவுக்கு ரூ. 3ம், பயறு, எண்ணெய் வித்துக்கு ரூ. 12, பருத்திக்கு ரூ. 20 என்ற அளவில் மானியமும் வழங்கப்படும்.

விவசாயிகள் விதைகளை வாங்கும்போது எச்சரிக்கையுடன் வாங்க வேண்டும். பல அரசு திட்டங்கள் மூலம் காய்கறி விதை, நடவு செடிகள், இடுபொருள் விவசாயிகளுக்கு வழங் கப் படுகிறது. அவற்றை விவசாயிகள் பயன்படுத்த வேண்டும். ஆடிப் பட்டத்திற்கு தேவை யான காய்கறி விதைகள் பாலூர் ஆராய்ச்சி மையத்தில் இருந்து பெறப்படும்.சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க 65 சதவீத மானியம் உள்ளது. அதை 160 எக்டேர் பரப்பில் அமைக்க ரூ. 19.8 லட்சம் நிதி பெறப்பட்டுள்ளது என்றார்.

**விதை விற்பனையாளர் கவனிக்க வேண்டியவை**

மதுரை:மதுரை , தேனி மாவட்ட விதை விற்பனையாளர்கள் மற்றும் வினியோகஸ் தர் கள், லேபிள் பொருத் திய, விதைகளை வாங்கி, முறைப்படி சேமிக்க வேண்டும். அதற்கு சரியான முறையில் பில் தயார் செய்து, பயிர் ரகம், குவியல் எண், காலாவதி நாள் குறிப்பிட்டு விதை வாங்கும் விவசாயிகளிடம், கையெழுத்துப் பெற்று விற்பனை செய்ய வேண்டும்.விதை விற்பனை உரிமங்களை விவசாயிகள் பார்வையில் படும்படியாக கடைகளில் தொங்கவிட வேண்டும்.

விதை, பயிர்ரகம், இருப்பு விபரங்களையும் தகவல் பலகையில் வைக்க வேண்டும். காலாவதி விதைகளை அதற்கான பதிவேட்டில் இருப்பு வைத்து தனி அறையில் வைக்க வேண்டும். பின் அவை யாரிடம் இருந்து பெறப்பட்டதோ அவருக்கே திருப்பி அனுப்ப வேண்டும் என, விதை ஆய்வு துணை இயக்குனர்(பொறுப்பு) சுப்புராஜ் தெரிவித்துள்ளார்.

---

- 

விழிகளுக்கு பசுமை விருந்து! : மழை பொழிந்து உயிர்கொடுத்ததற்கு நன்றியாக, வான் நோக்கி பசுமைக்கொடி உயர்த்தும் பாக்கு மரங்கள்! இடம்: வேடபட்டி, கோவை.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

***நபார்டு வங்கி நடப்பு நிதி ஆண்டில், மேலும் 94 லட்சம் விவசாயிகளுக்கு கடன் வழங்க இலக்கு***

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*மும்பை*
*நடப்பு 2010–11–ஆம் நிதி ஆண்டில், மேலும் 94 லட்சம் விவசாயிகளுக்கு கடன் வழங்க பொதுத் துறையைச் சேர்ந்த நபார்டு வங்கி முடிவு செய்துள்ளது. இது, சென்ற நிதி ஆண்டுடன் ஒப்பிடும்போது 21 சதவீதம் அதிகமாக இருக்கும் என இவ்வங்கியின் தலைவர் உமேஷ் சந்திரா சாரங்கி தெரிவித்தார்.*
*ரூ.3.75 லட்சம் கோடி*
*சென்ற நிதி ஆண்டில் நபார்டு வங்கி 4.56 கோடி விவசாயிகளுக்கு கடன் வழங்கி இருந்தது. நடப்பு நிதி ஆண்டில் 5.50 கோடி விவசாயிகளுக்கு கடன் வழங்க திட்டமிட்டுள்ளது. மேலும் இவ்வாண்டில் ரூ.3.75 லட்சம் கோடி வேளாண் கடன் வழங்க இலக்கு நிர்ணயம் செய்துள்ளது. நடப்பு ஆண்டில் பருவமழை சிறப்பாக இருக்கும் என இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது. மேலும் பல்வேறு விளைபொருள்களுக்கு சிறப்பான விலை கிடைத்து வருகிறது. இதனால் நடப்பாண்டில் முக்கிய உணவு தானியங்கள் மற்றும் பல்வேறு பயிர்கள்*

பயிரிடும் பரப்பளவு குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
கடன் தள்ளுபடி
கடந்த 2008–09–ஆம் நிதி ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டில் சுமார் ரூ.71,000 கோடி மதிப்பிற்கான வேளாண் கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. மேலும் நடப்பாண்டுக்கான பட்ஜெட்டில் வேளாண் கடன்களை திரும்ப செலுத்துவதற்கான கால அவகாசம் நடப்பு அண்டு ஜூன் மாதம் 30–ந் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
இது போன்ற அரசின் ஆதரவு நடவடிக்கைகளால் விவசாயிகள் ஊக்கம் பெற்றுள்ளதாக தெரிகிறது. விவசாயிகளின் உற்சாகம் காரணமாக நாட்டில் வேளாண் நடவடிக்கைகள் விறுவிறுப்படையும் என இத்துறையைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

## காய்கறி அபரிமிதமான விலை உயர்வு எதிரொலி வீடு, ஓட்டல்களில் முட்டை கோஸ் பொறியல்; முள்ளங்கி சாம்பார் கீரை விலை தங்கத்தை போல் கொடி கட்டிப்பறக்கிறது



காய்கறி கடைக்கு வரும் பெண்கள் விலை குறைவான கோஸ், முள்ளங்கியை வாங்கும் காட்சியை படத்தில் காணலாம்.

சென்னை, மே.29–
காய்கறிகள் அபரிமிதமான விலை உயர்வால், வீடு–ஓட்டல்களில் முட்டை கோஸ் பொறியல், முள்ளங்கி சாம்பார் வைக்கப்படுகிறது. கொத்தமல்லி உள்ளிட்ட கீரை வகைகள் எட்டாக்கனி போன்று விலை உயர்ந்து வருகிறது.
காய்கறி இறக்குமதி
கடந்த ஆண்டு இறுதியில் ‘கிடுகிடுவென’ உயர்ந்து வந்த காய்கறி விலை, இந்த ஆண்டு தொடக்கத்தில் சற்று குறைந்து பொதுமக்களுக்கு ஆறுதல் அளித்தது. ஆனால், தற்போது கோடை காலம் என்பதால் காய்கறி விலை மீண்டும் கடுமையாக உயர தொடங்கி உள்ளது.
தமிழகத்தில் விவசாய நிலங்கள் அழிக்கப்பட்டு, கட்டிடங்கள் கட்டப்பட்டு வருவதால், நமது உணவு தேவைகளையே நம்மால் பூர்த்தி செய்ய முடியவில்லை. இதனால், காய்கறி உள்ளிட்ட உணவு பொருட்கள் வெளி மாநிலங்களில் இருந்து இறக்குமதி

செய்யப்படுகிறது.

தற்போது சென்னை நகருக்கு ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் இருந்து காய்கறி இறக்குமதி செய்யப்படுகின்றன.

கோடை வெயில் தற்போது சுட்டெரிப்பதால், காய்கறி செடிகள் கருகி வருகின்றன. இதனால் காய்கறி உற்பத்தி பாதிக்கப்பட்டு விலையும் உயரத்தொடங்கியுள்ளன.

பீன்ஸ் விலை அதிகரிப்பு

கடந்த வாரம் ரூ.35–க்கு விற்பனையான ஒரு கிலோ பீன்ஸ், தற்போது ரூ.40 ஆக விலை உயர்ந்துள்ளது. கேரட் ரூ.25–ல் இருந்து ரூ.30 ஆகவும், நூக்கல் ரூ.18–ல் இருந்து ரூ.20 ஆகவும், சவ்சவ் ரூ.22–ல் இருந்து ரூ.25 ஆகவும், பீட்ரூட் ரூ.17–ல் இருந்து ரூ.20 ஆகவும் விலை அதிகரித்துள்ளது.

இதே போல், பச்சை மிளகாய் கிலோ ரூ.15–ல் இருந்து ரூ.20 ஆகவும், இஞ்சி ரூ.60–ல் இருந்து ரூ.70 ஆகவும், சேனை கிழங்கு ரூ.32–ல் இருந்து ரூ.35 ஆகவும் விலை உயர்ந்துள்ளது.

அவரைக்காய் கிலோ ரூ.25–ல் இருந்து ரூ.30 ஆகவும், தக்காளி ரூ.25–ல் இருந்து 30–க்கும், ஆந்திரா பல்லாரி ரூ.13–ல் இருந்து 15–க்கும், புடலங்காய், முள்ளங்கி, உருளைக்கிழக்கு ரூ.2 அதிகரித்து ரூ.12–க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

ஓட்டல்களில் கோஸ் பொறியல்

முருங்கைக்காய் ரூ.20– லிருந்து ரூ.25–க்கும், முட்டை கோஸ் ரூ.6–லிருந்து ரூ.8–க்கும் விற்பனை செய்யப்பட்டது. இவை அனைத்தும் மொத்த மார்க்கெட் விலை நிலவரம் ஆகும்.

சில்லரை காய்கறி கடைகளில் கூடுதலாக ரூ.4 வரை அதிக விலை வைத்து விற்பனை செய்கிறார்கள்.

ஒரு கிலோ முட்டை கோஸ் ரூ.8–க்கும், உருளைக்கிழங்கு ரூ.12–க்கு விற்பனை ஆவதால் எந்த ஓட்டல்களுக்கு சென்றாலும் கோஸ், உருளைக்கிழங்கு பொறியல்களை அள்ளி அள்ளிவைக்கிறார்கள்.

முள்ளங்கி ரூ.12–க்கு விற்பனையாவதால் பெரும்பாலான ஓட்டல்களில் முள்ளங்கி சாம்பார் பிரதான இடத்தை பிடித்து வருகிறது. இந்த நிலையை வீடுகளிலும் பொதுமக்கள் தினமும் கடைப்பிடிக்க தொடங்கி வருகின்றனர்.

எட்டாக்கனியானது கீரை

ஒரு கட்டு கொத்தமல்லி மொத்த மார்க்கெட்டில் ரூ.15–க்கும், சில்லரை கடைகளில் ஒரு கட்டு ரூ.18–க்கும் விற்பனையாகிறது. அகத்தி கீரை கட்டு ரூ.15–க்கும் விற்பனை ஆகிறது. இதனால் சில்லரை கடைகளில் கொத்தமல்லி கொசுறு (இலவசமாக) கொடுப்பதை நிறுத்தி விட்டனர். மொத்தத்தில் கொத்தமல்லி என்பது தங்கத்தை போன்று ‘எட்டா கனியில்’ ஒன்றாகி விட்டது. இதே போல மற்ற கீரை வகைகளும் அதிகமாக உயர்ந்து உள்ளது.

கீரைக்கு நோய் எதிர்ப்பு சக்தி, ரத்தத்தை சுத்தப்படுத்துதல், கண்பார்வை அதிகரிப்பு, குடலை சுத்தப்படுத்துதல் போன்றவை உள்ளது. இந்த விலை உயர்வு நோயாளிகள் மற்றும் பொதுமக்களை கடும் இன்னல்களுக்கு ஆளாக்கி உள்ளது.

பொதுமக்கள் ஆதங்கம்

மீன்கள் இனப்பெருக்கத்திற்காக கடலில் மீன் பிடிக்க 45 நாட்கள் தடை தற்போது அமலில் இருந்து வருகிறது. இதனால், மீன் விலை ராக்கெட் வேகத்தில் அதிகரித்து

*உள்ளது.*

*ஆட்டிறைச்சி மட்டன் 1 கிலோ ரூ.300–க்கும், கிலோ சிக்கன் ரூ.170–க்கும் விற்பனையாகிறது. இந்த கடுமையான விலை உயர்வால் அசைவ பிரியர்கள் அனைவரும் சைவத்துக்கு மாறி வந்தனர். தற்போது அதிகரித்துள்ள காய்கறி விலை உயர்வால் அவர்கள் இன்னும் மனம் வெதும்பி போய் உள்ளனர். மட்டன், சிக்கனையாவது 3 நாட்கள் வரை வைத்து சாப்பிடலாம்.*

*ஆனால், காய்கறிகளை எப்படி வைத்து சாப்பிடுவது? என்று பொதுமக்கள் ஆதங்கப்பட்டு வருகின்றனர். காய்கறி, அசைவ பொருட்களின் விலை உயர்வால் கீரையாவது வாங்கி சாப்பிடலாம் என்று நினைத்து அதன் பக்கம் திரும்பினால், கீரை கட்டுகள் ரூ.15–க்கு விற்பனை ஆகிறது.*

*இனி எந்த பொருட்களை உண்டு உயிர் வாழ்வது என்று பொதுமக்கள் மனக்குமுறலில் இருந்து வருகின்றனர்.*

*இதில், அரசு தலையிட்டு காய்கறி விலை உயர்வை கட்டுப்படுத்த கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.*